# கண்காணிப்புக் குழுவில் நாம் நம்பிக்கையில்லை

# ஆனாலும் உயிராபத்து, ஆட்கடத்தல் ஏற்படாது

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 7-11-86 வியாழக்கிழமை (ஐப்பசி 22 ஸபர் 23) முழக்கம் 273

## போராளிகள் சிங்களத்திலும தமிழிலும் ஒலிபெருக்கி அறிவிப்பு

ஸ்ரீ லங்கா அரசின் 'கண்காணிப்புக்குழு' நேர்மையாக இயங்கும் என்பதில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும், இருந்தபோதிலும் அதன் குறைந்தபட்ச செயற்பாட்டை அனுமதிப்பதாகவும் 'ஈழ விடுதலைப் போராளிகள்' ஒலிபெருக்கி மூலம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் பாதுகாப்புப் படையினருக்கும் பகிரங்கமாக நேற்று அறிவித்தனர். கண்காணிப்புக் குழுவின் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அசோக் ஹோட்டலுக்குச் சுமார் முப்பது யார் தொலைவில் உள்ள மரத்தில் கட்டப்பட்டிருந்த இரண்டு ஒலிபெருக்கிகளின் மூலமாகவே இப் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டது இரு ஒலிபெருக்கிகளில் ஒன்று ஹோட்டலை நோக்கியும் மற்றது கோட்டை இராணுவ முகாமை நோக்கியும் கட்டப்பட்டிருந்தது. காலை சுமார்

—6ஆம் பக்கம் பார்க்க

# இரு கண்ணிவெடி தாக்குதலில்

# 7 பொலிஸ் 4 இராணுவம் பலி!

திருகோணமலையில் நேற்றுக் காலை நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் ஏழு பொலிஸாரும், மட்டக்களப்புப் பகுதியில் நேற்று முற்பகல் நடைபெற்ற மற்றொரு கண்ணிவெடித் தாக்குதலில் நான்கு ராணுவத்தினருமாக மொத்தம் பதினொரு ஆயுதப் படையினர் கொல்லப்பட்டனர்.

சேருநுவரை என்ற இடத்திலிருந்து திருகோணமலைக்கு ஜீப் வண்டியொன்றில் சென்று கொண்டிருந்த பொலிஸார் தம்பலகாமத்தை அண்மித்த போது கண்ணிவெடியில் சிக்கினர்.

ஜீப்பில் பயணம் செய்த சகல பொலிஸாருமே கொல்லப்பட்டதாகவும், ஜீப் சுக்குநூறாகியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகரை ராணுவ முகாமிலிருந்து ட்ரக்கில் சென்ற ராணுவத்தினர் நேற்று முற்பகல் கண்ணிவெடியில் சிக்கியதால் மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நால்வரில் மற்றொருவர் அங்கு மரணமானார்.

...6ம் பக்கம் பார்க்க

### இன்று

## ராணுவ விசாரணை

கண்காணிப்புக் குழுவினர் பொதுமக்களின் விசாரணை

—6ஆம் பக்கம் பார்க்க

### தமிழீழ குழுக்கள் சென்றன

## புதுடில்லியில் பேச்சுக்கள் இன்றும் நாளையும் நடக்கும்

(புதுடில்லி)

கடந்தவாரம் இடைநிறுத்தப்பட்ட புதுடில்லிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இதில் கலந்து கொள்வதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சகல தமிழீழக் குழுக்களும் நேற்று மாலை சென்னையிலிருந்து புதுடில்லி புறப்பட்டுச் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரத வெளியுறவுச் செய

—6ஆம் பக்கம் பார்க்க

### யாழ். பல்கலைக்கழக மாணவரவை :

## 30 மாணவர் கைதின்மூலம் அரசின் சுயரூபம் அம்பலம்

மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழக கல்லூரி வளவினுள் புகுந்த ஆயுதப் படையினர் மாணவர்கள் முப்பது பேரினை கைது செய்த சம்பவத்தைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவரவை அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் போர் நிறுத்தம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு அதனைக் கண்காணிப்பதற்காகக் குழுவும் நியமிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் இச்சம்பவம் நடைபெற்றிருப்

—6ஆம் பக்கம் பார்க்க

### கண்காணிப்புக் குழுவின் நேற்றைய விசாரணை

## யுத்த நிறுத்த அமுலின்போது ராணுவ முகாம் தேவையில்லை

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்த பருத்தித்துறை பிரஜைகள் குழு உறுப்பினர்கள் யுத்த நிறுத்தம் அமுலில் உள்ளபோது இராணுவ முகாம்கள் இயங்கத் தேவையில்லை எனவும் அதனால் பருத்தித்துறையிலுள்ள இராணுவ முகாமை மூடிவிட வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்கள்.

பருத்தித்துறையில் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியே பாதுகாப்புப் படையினர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தனர் எனவும் அப்போது இருவர் கொல்லப்பட்டும் ஹாட்லிக் கல்லூரி, கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது பருத்தித்துறைப் பகுதியில் இதுவரை 55 பேர் கொல்லப்பட்டும் பத்துப்பேர் வாழ்க்கைக்கு உதவாத வகையில் படுகாயமுற்றுள்ளதாகவும் பிரஜைகள் குழுவினர் எடுத்துக் கூறினார்கள்.

இவ்வாறான நிலையில் மக்கள் அச்சத்துடனும், பயத்துடனுமே வாழ்ந்துவருவதால், இராணுவ நடமாட்டமுள்ள எந்தப் பகுதியிலும் சாட்சியமளிக்கமுன் வரமாட்டார்கள். இதனாலேயே இங்கும் அவர்கள் சாட்சியமளிக்க வரவில்லை என்று பிரஜைகள் குழுவினர்

— 6-ம் பக்கம் பார்க்க

## பஸ் நிலைய சப்த நாதத்தால் யாழ். ஆஸ்பத்திரி பாதிப்பு

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலும், அதனைச் சுற்றியுள்ள சில உணவுச்சாலைகளிலிருந்தும் ஒலிபரப்பப்படும் பாடல்களால், யாழ். ஆஸ்பத்திரியின் பல அன்றாட கடமைகள் பாதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தின் மேல்மாடியில் நடைபெறும் பல கிளினிக்குகளில் டாக்டர்கள் நோயாளர்களைச் சரியாகப் பரிசோதிக்க முடியாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது.

சில நோயாளிகளின் இருதயத் துடிப்பை 'ஸ்டெதஸ்

...6ம் பக்கம் பார்க்க

### வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு

## ராணுவ கொலை பயமுறுத்தல் கொள்ளைகள் பற்றி முறையீடு

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டதன் பின்பும் வல்வெட்டித்துறைப் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினால் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்கள்.

சிதம்பராக் கல்லூரி மதில் உடைக்கப்பட்டது சம்பந்தமாக கல்லூரி அதிபரும், இப்பகுதியில் இடம்பெற்ற கொள்ளை, கொலை, பயமுறுத்தல் சம்பவங்கள் தொடர்பாக நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களும் தனித்தனியாக அச்சம்பவங்கள் பற்றி கண்காணிப்புக் குழுவினருக்கு விபரித்தார்கள்.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் சார்பில் திருவாளர்கள் எஸ். குமாரசுவாமி தேவராஜா, ஆடியபாதம் ஆகியோர் கண்காணிப்புக் குழுவிற்கு சாட்சியமளித்தார்கள்.

நேற்றுக்காலை கூட பல கவச வாகனங்களில் இராணுவத்தினர் யாழ் நகரில் நின்றதால்

...6ஆம் பக்கம் பார்க்க

### ஈழ வானொலியில் இன்று

## பத்மநாபா உரையாற்றுவார்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா 'ஈழ வானொலி' மூலம் இன்று மாலை உரையாற்று

...6-ம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத மின் பாவனைக்கு பெண் பலி, ஒருவர் ஆபத்தில்

(இருபாலை)

யாழ்ப்பாணம் சிவராசா வீதியைச் சேர்ந்த 56 வயதுடைய நாகராசா தவமணி என்ற பெண்மணி மின்சாரம் தாக்கியதில் பலியானார்.

மேற்படி பெண் அலுமினியக் குழாயுடன் இணைத்துக் கட்டப்பட்டிருந்த கொக்கச் சத்தகத்தினால் தேங்காய் பிடுங்க முனைந்தபோது அலுமினியக் குழாய் தவறி வீதியில் சென்று கொண்டிருந்த மின் கம்பியில் வீழ்ந்ததால் பெண் மீது மின்சாரம் தாக்கியதால் ஸ்தலத்திலேயே பலியானார்.

மின்சாரம் தாக்கியவரை காப்பாற்றச் சென்ற அயலவர் ஒருவரையும் மின்சாரம் தாக்

...6ம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

## வரி விளம்பரம்

### காணவில்லை!

சில தினங்களுக்கு முன்பு அச்சுவேலி கைத்தொழிற் பேட்டைச்சந்திக்கும், வலலை ரோட் அந்தோனியார் கோவிலுக்கும் இடையில் திறப்புக் கோர்வை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். இ பரலேகநாதன், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

### தேவை

சகலவிதமான ஆடைகளும் வெட்டி தையல் செய்யக் கூடிய மாநகர எல்லைக்குள் வசிக்கும் பெண்கள் 10-11-85 க்கு முன் சகல விபரங்களுடன் விண்ணப்பம் செய்யவும். நியூ அங்கலின் இண்டர்ரீஸ், 7/1, புதிய வீதி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

THANKS
TO
MAHA VISHNU
SRI HANUMAN
VELANKANNI
ST. ANTONY
ST. JUDE
N. S.

## இலவச நூல் விநியோகம்

(சரசாலை)

அளவெட்டி, ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தினர் மாதந்தோறும் மாத இதழாக திருநெறி என்றநூலை வெளியிட்டு வருகின்றனர். மேற்படி நூலை இலவசமாக நூல் நிலையங்கட்கும் இந்து மத நிறுவனங்கட்கும் தமிழ்மக்கட்கும் விநியோகித்து வருகின்றனர்.

## யாழ்ரன் கல்லூரி பரிசளிப்பு விழா

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை அதிபர் திரு. கே. கே. நடராஜா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டைத் தொகுதி வட்டாரக் கல்வியதிகாரி திரு. ப. சண்முகராஜா கலந்து கொள்வார். அதிபரின் ஆண்டறிக்கையைத் தொடர்ந்து பிரதம விருந்தினரின் சிறப்புரை இடம் பெறும். பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்குவார்.

## நிர்வாகசேவை பதவி உயர்வு

தாவடியைச் சேர்ந்த முத்தையா சுப்பிரமணியம் அவர்கள் இலங்கை நிர்வாக சேவை 1ம் வகுப்புக்கு 1-7-84 ம் ஆண்டு தொடக்கம் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் இலங்கை அரசாங்க கணக்காளர் சேவையில் இருந்து 1ம் வகுப்பு நிருவாக சேவைக்கு நியமனம் பெற்றவருள் முதலாவது உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபராகவும், யாழ் மாவட்டத்தில் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபராகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபராகவும், விவசாய அமைச்சில் உதவிச் செயலாளராகவும், வடபிராந்திய உதவி குடிவரவு குடியகல்வு உதவி ஆணையாளராகவும் கடமையாற்றியவர்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியாகவும், வறுமை நிவாரண உதவி ஆணையாளராகவும்கடமையாற்றுகிறார்.

**TOEFL** The stepping stone to a Carreer abroad. Classes For Jan, Feb Tests Bonanza 35, Listening Comprehensions.

Contact: **V. S. Kirubaraj**
23, 3rd Cross St. Jaffna.

குவைத்:

முஸ்லீம், தமிழ் வீட்டுப் பணிப்பெண்கள் தேவை மற்றும் பாஸ்போட் ( 2 கிழமைகளில் பெற்றுத்தரப்படும். )

அமெரிக்கா, மெக்சிக்கோ, Franck Furt, பேர்ளின் ஆகிய நாடுகளுக்கு விசாவுடன் எங்கள் முகவர் உங்களை அழைத்துச் செல்வார்.

அத்துடன் இந்தியன் விசா மற்றும் சகல நாடுகளுக்குமான விமான பயணச் சீட்டுகளுக்கு;

**குறூப் அட்லாண்டிக்**

163, ஆஸ்பத்திரி வீதி,
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

### 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திரு. காசிப்பிள்ளை பாலச்சந்திரன்

தோற்றம் - 18 8-1952 மறைவு - 8-8-1985

எமது குடும்பத்தலைவனின் இழப்பால் எமக்கேற்பட்ட துக்கத்தில் கலந்து கொண்டு பங்கேற்ற சகலருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மட்டுவில் வீதி, சாவகச்சேரி. — மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்,

## சிறுவருக்கு இலவச முட்டை

(நல்லூர்)

யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலைக்கு விஜயஞ் செய்த யாழ். பரி. யோவான் கல்லூரி லியோ கழக அங்கத்தவர்கள் சிறுவர் வாட்டில் தங்கிச் சிகிச்சை பெறும் சிறுவர்களுக்கு கழகத்தின் சார்பில் முட்டைகள் வழங்கினர்.

பரி.யோவான் கல்லூரி கழகத் தலைவர் லியோ மைக்கல்-சபாபதிப்பிள்ளையின் தலைமையில் கழக அங்கத்தவர்கள் இங்கு சென்றிருந்தனர்.

## சத்தியப் பிரமாணம் செய்தார்

(சுண்டுச்குளி)

செல்வி மரீனு தர்ஷினி தர்மலிங்கம் சட்டத்தரணியாகக் கொழும்பு உயர் நீதி மன்றத்தில் பிரதம நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் யாழ்ப்பாணம் வி. தர்மலிங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், கொட்டாஞ்சேனை புனித நல்லாயர் கன்னியர் மடம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியுமாவார்.

## பரி. யோவான் வெற்றி

(நல்லூர்)

யாழ். பரி. யோவான் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வருடாந்த உதைபந்தாட்டப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டிகள் வெற்றி பெற்றன.

மூன்றும் பிரிவுக்கான போட்டியில் 1 : 0 கோலாலும், இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் 1 : 0 கோலாலும், முதலாம் பிரிவுக்கான போட்டியில் 1 : 0 கோலாலும் யாழ். பரி. யோவான் கல்லூரி வெற்றியீட்டியது.

## நெற்பயிர் தொற்றுநோய் ஆரம்பம்

(சாவகச்சேரி)

உசன் கிராமப் பகுதியிலுள்ள நெல் வயல் வெளிகளில் உள்ளநெற்பயிர்களுக்கு, சந்துக்குத்தி மடிச்சுக்கட்டி போன்ற ஒரு வகைநெற்பயிர் தொற்று நோய் இப்பொழுது ஆரம்பமாகியுள்ளது. இதை அயல் வயல்களிலும் பரவவிடாது விவசாயிகள் கவனமாக இருக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட விவசாய உதவி ஆக்க ஆணையாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதைக்கட்டுப்படுத்த 'மெனேகுரோட்டயெஸ்' என்னும் கிருமிநாசினி தெளித்தல் அவசியம் என்றும், மட்டுவில் விவசாயிகள் மத்தியில் பேசும் போது அவர் குறிப்பிட்டார்.

## உரக்களஞ்சியம் விஸ்தரிப்பு

(சாவகச்சேரி)

மட்டுவிலில் அமைந்துள்ள உரக் களஞ்சியம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது. சுமார் முப்பதினாயிரம் ரூபா செலவில் மேலும் இரு அதிகாரிகளுக்கான அலுவலகங்கள் இங்கு மிக விரைவில் அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ண பிள்ளை தெரிவித்தார்.



❀ மல்லாகம், வைகுந்தநாதன் மனோரதம் தம்பதியின் மகன் டஜந் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ புங்குடுதீவு, சுசைரத்தினம் மேரிரோஸ் தம்பதியின் மகள் ஜெயமாலா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ பாண்டியன்தாழ்வு, அன்ரனி சாமி ஞானவடிவு தம்பதியின் மகன் இக்னேசியஸ் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ குருநகர், யேசுதாஸ் பிறில்ஸிடா தம்பதியின் மகள் மாலா இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ ஆனைக்கோட்டை, இரத்தினசபாபதி தம்பதியின் மகன் கிருபாகரன் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ மன்னார், சாம் ஜெயதிலகராஜா தம்பதியின் மகன் ஜோயல் நிறாசன் இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ வேலணை மேற்கு, சத்தியமூர்த்தி யோகேஸ்வரி தம்பதியின் மகன் விவேகன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ குருநகர், தவம் இந்திரா தம்பதியின் மகள் மேரி பிறின்ஸி டயாறு இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ அளவெட்டி வடக்கு, கந்தையா மனோன்மணி தம்பதியின் மகள் புவனேஸ்வரி இன்று தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ யாழ். மானிப்பாய் வீதி, சபறுல்லா தஸ்லீமா தம்பதியின் மகள் சில்மியா பானு இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ ஈச்சமோட்டை, பத்மநாதன் தம்பதியின் மகன் சோதீசன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

## நாவலர் நிலைய நிர்வாகிகள்

(மண்கும்பான்)

வேலணை மேற்கு நாவலர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் திரு க. தம்பிராசா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர்கள் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக திரு. க. தம்பிராசா, உபதலைவர் திரு. அ. காந்தமூர்த்தி, செயலாளர் திரு. க. பங்கையச் செல்வன் உதவிச் செயலாளர் திரு. நா. சரவணபவான், தனாதிகாரி திரு. க. கங்கை வேணியன், கணக்குப்பரிசோதகர்கள் திரு. வாளர்கள். சோ. ஆனந்த தவராசா, சு. சிவநாதன் மற்றும் 15 பேர்கள் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## அகதிகளுக்கு சங்கம் உதவி

(சுண்டுக்குளி)

கச்சேரி - நல்லூர் வீதியில் மகளிர் பேரவையினால் நிர்வகிக்கப்பட்டு வரும் திருமலை அகதிகள் முகாமுக்கு அரியாலை தெங்கு - பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் அரிசி, மா போன்ற உணவுப் பொருட்களை நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

சங்கத் தலைவர் திரு. த. சிவலிங்கம் தலைமையில் அகதிகள் முகாமுக்கு நேரடியாகச் சென்ற சங்க நிர்வாகிகள் உணவுப் பொருட்களை வழங்கியதுடன் அங்கு தங்கியுள்ள அகதிகளுடன் அளவளாவி ஆறுதல் கூறினர்.

## பத்தாம் திகதி அத்தியட்சாதீன தினம்

(நல்லூர்)

இலங்கைத் திருச்சபையின் கொழும்பு அத்தியட்சாதீனப் பேராயர் பேரருட்திரு: சுவீதின் பெர்னாண்டோ ஆண்டகை நவம்பர் மாதம் 10ந் திகதி ஞாயிற்றுக்கிழமையை அத்தியட்சாதீன தினமாகப் பிரகடனப் படுத்தியுள்ளார்,

இந்நாளில் நடைபெறும் ஆராதனைகளில் அத்தியட்சாதீன வேலைகளுக்காகவும், அத்தியட்சாதீனத்தில் பணிபுரியும் பேராயர், குருமார் ஊழியர் ஆகியோரின் சேவைகளுக்காகவும் விசேட ஜெபங்களை ஏறெடுக்கும்படியும், அத்தியட்சாதீனத்தின் சகல வேலைகளுக்காகவும் சபையார் போதிய நிதியைவழங்கவேண்டுமென்று பேராயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அபிவிருத்திச்சங்க தெரிவுகள்

(செம்பியன்பற்று)

மருதங்கேணி இந்து வித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் அதிபர் பொ. சங்கரப்பிள்ளை அவர்கள் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் வித்தியாலய அபிவிருத்தி சம்பந்தமாக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர்; தலைவர். பொ. சங்கரப்பிள்ளை (அதிபர்) உபதலைவர்: வே. சுப்பிரமணியம், செயலாளர்: செ. நற்குணம், உபசெயலாளர்: பொ. தனபாலசிங்கம், பொருளாளர்: திருமதி. ச. நடராசா (ஆசிரியை), கணக்குப்பரிசோதகர்கள்: சி. சிறிகந்தசாமி, மு. சண்முகலிங்கம், இ. தங்கராசா மற்றும் செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## டிறிபேக் முதலிடம்

(சரசாலை)

சாவகச்சேரி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் டிறிபேர்க் கல்லூரியின் 15, 17, 19, வயதுக் கீழ்ப்பட்ட பிரிவுகள் மூன்றும் முதலிடம் பெற்று சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தேவை

யாழ். நகரிலுள்ள வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு தமிழ் தட்டெழுத்தாளர் (பெண்) தேவை. ஆங்கில தட்டெழுத்து அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்ப முடிவு திகதி : 14-11-85:

விள. இல. B/846
C/o. ஈழமுரசு,
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

# போஷாக்கான இலைவகைகளை உண்ணப்பழக வேண்டும்

(சரசாலை)

கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையத்திறப்பு விழா கச்சாய் சங்கிலி கிணற்றடியில் உள்ள கச்சாய் மருத்துவமாது இல்லத்தில் ஆசிரியர் திரு. மு காசித்தம்பி தலைமையில் இடம்பெற்றது. மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்தினை டாக்டர் திரு. த.சிங்கராசா திறந்து வைத்தார்.

அவர் தமது உரையில், இக்கிராமத்தில் இந்தச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுவது மிகவும் நல்லதொரு விடயமாகும். நோய்களினின்று மக்களை பாதுகாக்க இச்சுகாதார நிறுவனங்கள் அரும்பணியாற்ற முடியும். சிறு பராயத்திலேயே நோய் வராது தடுக்க தடுப்பு மருந்துகளை பிள்ளைகட்கு கொடுக்க வேண்டும். இதற்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என்றார்.

போசாக்குள்ள உணவுவகைகள் இயற்கையிலேயே எமது கிராமங்களில் உண்டு. அதனை நாம் பயன்படுத்த வேண்டும். முசுட்டை, சண்டி, வல்லாரை தூதுவளை, முருங்கை போன்ற பல போசாக்குள்ள இலைவகைகளை பிள்ளைகட்கு ஆரம்பத்தில் இருந்து கொடுக்க வேண்டும். இதன் மூலம் பிள்ளைகட்கு போசாக்கு ஏற்படுகின்றது. இன்றைய சூழ் நிலையில் இச்சுகாதார நிலையங்கள் முதலுதவி போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கலாம் எனவும் அவர் சொன்னார்.

சாவகச்சேரி உதவி அரச அதிபர் பேச்சு

# பொதுமக்களை சூறையாடும் வர்த்தகர்களை அன்பின் மூலம் திருத்துவதே சிறந்ததாகும்

(கொடிகாமம்)

“சூழ்நிலை காரணமாக பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் இன்று நலிந்த நிலையில் நிர்ப்பந்தத்தின் பெயரிலேயே இயங்குகின்றன. பலர் இந்த சங்கங்களில் அங்கத்தவர்களாய் இருந்த போதிலும், தங்களை வியாபாரிகள் சூறையாடுவதினை எதிர்த்துபோராட இவர்கள் முன்வருவதில்லை. பொதுமக்களை சூறையாடலில் இருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பாவனையாளர் பாதுகாப்பு சங்கங்களுக்கே உண்டு. இதற்காக அவர்கள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். வியாபாரிகள் செய்யும் வேலையை பாவனையாளர் சங்கங்கள் தாம் பொறுப்பெடுத்துச் செய்ய முனையக்கூடாது.

பொது மக்களை சூறையாடும் வியாபாரிகளை சட்டத்தின் மூலம் திருத்துவதை விட அன்பின் மூலம் திருத்துவதே தற்போதைய சூழ்நிலையில் மிகவும் பொருத்தமானதாகும். நிறுவை, அளவை, விலைக்கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மீறப்படும்சந்தர்ப்பங்களில் பாவனையாளர்களும், வியாபாரிகளும் ஒன்றுகூடி கலந்தாலோசித்து பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக் கொள்ளலாம். அல்லது சமாதான சபைகளின் உதவியுடன் அப்பிரச்சினைகளை தீர்க்க முயலலாம் இவ் முயற்சிகளில் உடன்பாடு காணப்பட முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே அதிகாரிகளின் உதவியுடன் சட்ட ரீதியாக இவற்றை அணுகுதல் வேண்டும்”

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான பாவனையாளர் பாதுகாப்பு மத்திய குழு அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர் திரு.கி. நவரத்தினம் தமதுரையில் “கிராமிய ரீதியாக உருவாக்கப்பட்ட பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்களிடையே தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றை நல்ல முறையில் செயற்பட வைப்பதே மத்திய சங்கத்தின் நோக்கம்” என குறிப்பிட்டார்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாவனையாளர் பாதுகாப்பு மத்திய சங்க நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது தலைவராக உதவி அரசாங்க அதிபர் கே. துரைராசாவும், செயலாளராக வை. சிவபாலனும் (மட்டுவில் வடக்கு), உப செயலாளராக க. கண்ணதாசனும் (சரசாலை), பொருளாளராக க. உருத்திர சுந்தரமும் (கைதடி) தெரிவாகினர். ஐவர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

உதவி அரச அதிபர் மாகாலிங்கம் பேச்சு:

# போதிய போஷாக்கின்மையே இன்றைய பெரும் பிரச்சினையாகும்!

(உடுவில்)

“மனித உயிர்களோடு மிக மிகத் தொடர்புடையது சுகாதாரம். சுகாதார சேவைகளை மக்களுக்கு அறிமுகப் படுத்துவதற்காகவே இத்தகைய சுகாதார வார விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இவ்வாறு யாழ். அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட பிரிவில் நடைபெற்ற சுகாதார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வலி தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் குறிப்பிட்டார். மேற்படிவிழா உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் அதன் தலைமை ஆசிரியர் திரு. வை. யோகீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில், இரண்டாயிரமாம் ஆண்டளவில் சகல மக்களுக்கும் சுகாதார வசதிகளை அளிப்பதே இவ்விழாவின் நோக்கமாகும். கிராம மக்களிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதாரத் தொண்டர்கள் மூலம் மக்களுக்கு வேண்டிய சுகாதார போதனைகளை வழங்குவதுடன், உதவிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது அடுத்தபடியாக மக்களிடையே போஷாக்கு இன்மை பெரும் பிரச்சினையாகவுள்ளது பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளில் 30வீதத்தினர் போஷாக்கு அற்றவர்களாகவுள்ளனர். இத்தகைய நிலையை நீடிக்கவிடாது குழந்தைகளை ஆரோக்கிய மானவர்களாக்குவது சுகாதாரப் பிரிவினரின் அதிமுக்கிய பங்காகும் என்றார்

அடுத்துப் பேசிய பாடசாலையின் அதிபர்:- “சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்,” ‘நோயற்ற வாழ்வே குறைவு அற்ற செல்வம்’ என்ற முதுமொழிக்கிணங்க மக்களை சுகதேகிகளாகவும், பலசாலிகளாகவும் ஆக்குவதற்கு தற்பொழுது சுகாதார சேவை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

உடுவில் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். தங்கவேலாயுதம், உடுவில் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி. ஆர். சோமசுந்தரம் ஆகியோரும் இன்னும் பல பிரமுகர்களும் உரையாற்றினார்கள். சுகாதாரப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற பாடசாலை மாணவ மாணவிகளுக்கும், தொண்டர்களுக்கும் பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார்.

# புதிய விடயங்களை சிறுர்கள் புதிய சூழலில் கற்கின்றனர்

## கல்வியதிகாரி கருத்து

(புங்குடுதீவு)

“சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பாடசாலைகள் துணை புரிகின்றன. பாடசாலை வரும் சிறுவர்கள் புதிய விடயங்களைப் புதிய சூழலில் கற்க முற்படுகிறார்கள். ஆசிரியர்கள் அவர்களுக்குத் துணை புரிபவர்களாகத் திகழ வேண்டும். சிறுவர்களிடமுள்ள ஆற்றல்களை ஆக்கத் திறன்களை விருத்தி செய்ய ஆசிரியர்கள் உதவ வேண்டும்”

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த கல்வியதிகாரி திரு. கு. சோமசுந்தரம் புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற சேவைக்கால ஆசிரியர் பயிற்சி வகுப்பொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

புங்குடுதீவு கல்வி வட்டாரப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டில் இரண்டாம் ஆண்டுமாணவர்களைக் கற்பிக்கவிருக்கும் ஆசிரியர்கள் இப்பயிற்சி வகுப்பிற் கலந்து கொண்டனர்.

திரு.சோமசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், ஆரம்ப வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

புங்குடுதீவு வட்டாரக்கல்வி அதிகாரி திரு. க. இ. ஆறுமுகம், வள ஆசிரியை திருமதி அ. ரகுநாதன் ஆகியோருட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

# அகதிகளுக்கு அன்பளிப்பு

(நல்லூர்)

நல்லூர் பரி. யாக்கோபு ஆலய வாலிபசங்கப் பிரதிநிதிகள் கச்சேரி நல்லூர் வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு அகதிகள் முகாங்களுககும் விஜயம் செய்து வாலிபர் சங்கத்தின் அன்பளிப்பாகப் பாய்கள் வழங்கினார்கள்.

வாலிபர் சங்கத் தலைவி செல்வி. ஆனந்தி துரைசிங்கம், செயலாளர் செல்வன் ஞானசுதன் நவநீதகிருஷ்ணன் ஆகியோரின் தலைமையில் சென்ற வாலிபர் சங்கப் பிரதிநிதிகள் அன்பளிப்பை வழங்கியதுடன், முகாமில் தங்கியிருக்கும் அகதிகளோடு உரையாடி ஆறுதல் கூறினர்

பருத்தித்துறை வீதியிலுள்ள முகாமின் பொறுப்பாளர் டாக்டர் சசிதரன் வாலிபர் சங்கக் குழுவினரை வரவேற்று அவர்களின் அன்பளிப்புக்கு நன்றி தெரிவித்தார்.

# இளைஞர்களை நல்வழிப்படுத்த மறைக்கல்வி மிகஅவசியம்

‘இன்றைய கால கட்டத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு, சமாதானம், அன்பு, பெரியோரைக் கனம் பண்ணுதல் என்ற பண்புகளும் அமைச்சல், பணிவு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இறை பக்தி என்பனவும் சீரழிந்து நிலை கெட்டுள்ளது. என்ன செய்வதென்று நம் இளைய சந்ததியினர் தத்தளிக்கும் இந்த நேரம் அவர்களை நல்வழிப்படுத்த மறைக்கல்வி மிகவும் அவசியமாகும்’ இவ்வாறு யாழ். மறைக்கல்வி இயக்குனர் வண. பிதா. நேசநாயகம் கூறினார்.

காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்ற மறைக்கல்வி வேதாகமக் கண்காட்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசிய வண. நேசநாயகம் அடிகள் நல்லதொரு சமுதாயம் உருவாக இறை அறிவும் இன்றியமையாதது. மறை அறிவு வளர்ந்தால் நாம் தூய மனத்துடன் வாழலாம் என்றார்.

கரம்பன் பங்குத் தந்தை வண.பிதா லோறன்ஸ் சேவியர் இக்கண்காட்சியை திறந்து வைத்தார் ஊர்காவற்றுறை பங்குத் தந்தை வண. பிதா. எஸ் கிருபானந்தன், பரிசில்கள் வழங்கினார். யாழ். கத்தோலிக்க ஆசிரியர் சங்க செயலாளர் திரு சி. வின்சன்ற், ஆசிரியர்கள் திரு. யோசப், திரு. சேவியர் ஆகியோரும் பேசினர்.

# சித்த மருத்துவ மாணவர் மன்றம் தெரிவானது

(கொடிகாமம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறைக்கான மாணவர் மன்ற அங்குரார்ப்பணக்கூட்டம் அண்மையில் கைதடி சித்த மருத்துவ கல்லூரி விரிவுரை மண்டபத்தில் டாக்டர் எஸ். பவானி தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்ற போது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர் எஸ். யே. அமலநாதன், உபதலைவர். செல்வி. ரி வசந்து, செயலாளர். எஸ். சிவசண்முகராசா, உபசெயலாளர் செல்வி. வி. விக்னவேணி, பெரும் பொருலாளர், திருமதி. எம். சிறீகாந்தா, இளம் பொருளாளர். கே. வடிவேலு அறுவர் கொண்ட நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# அராலி தெற்கு கிழக்குபகுதி ஆரம்ப சுகாதார நிலையம்

அராலி தெற்கு கிழக்குப் பகுதிகளுக்கான ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவ நிலையமும் அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் அராலி தெற்கு கிழக்கு சுகாதாரக் கழகத்தின் ஆதரவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திரு. சேனாதிராசாவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ‘போறாட்’ வடபிராந்திய கிளையின் பொறுப்பாளர் திரு. சண்முகதாசன், மானிப்பாய் சுகாதார அத்தியட்சர் நிலைய மருத்துவ பரிசோதகரும் அராலி கிளைக்குப் பொறுப்பான மருத்துவ அதிகாரியும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் கழகத்தின் சார்பில் திரு. கொன்ஸ்ரான்ரைன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

திரு. சேனாதிராசா தமது தலைமை உரையில், ஆரம்ப சுகாதார நிலையத்தின் தேவை பற்றியும் மக்களினதும் இளம் சந்ததியினரினதும் பங்களிப்பு பற்றி எடுத்துக் கூறினார். பங்கு பற்றிய பேச்சாளர் பலரும் தங்கள் ஸ்தாபனங்களின் பங்களிப்பு பற்றி எடுத்துக் கூறினார்கள். செயலாளர் திரு. ச. கணேசன் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலைய அமைப்பின் தோற்றம் பற்றியும் பல்வேறு ஸ்தாபனங்களின் உதவிகளையும் எடுத்துக் கூறினார்.

பொருளாளர் திரு.மு. குணரத்தினம் தமது நன்றியுரையில், ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைப்பதற்கான ஆரம்ப செலவீனம் பற்றி விரிவாக எடுத்துரைத்து மக்களின் ஆதரவைக் கோரியதுடன் வருகை தந்த பேச்சாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# நிர்வாகிகள் தெரிவாகினர்

(புங்குடுதீவு)

வேலணை தெற்கு துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் ஆசிரியர் திரு. செ. சண்முகவடிவு தலைமையில் நடைபெற்றபோது நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு செ திருவாசலிங்கம், உப-தலைவர்: திரு. எஸ். சோதிதாசன், செயலாளர்: திரு. இ. தில்லைச்சிவன், உப-செயலாளர். திரு. த. இராசசேகரன், பொருளாளர்: திரு. ஆ. கனகசபை.

# அகதிகளுக்கு வழங்கப்படும் அரிசி பாவனைக்கு உதவாது

## பிரஜைகள் குழு புகார்

அரசினால் அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரண நிதித் தொகைக்கு ஈடாக மானிப்பாய். பரீஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளினால் பாவனைக்கு உதவாத அரிசி வினியோகிக்கப்படுகிறது. அத்துடன் பொருள் வினியோகத்திலும் கட்டுப்பாடு விதிக்கப் படுகிறது.

இவ்வாறு சண்டிலிப்பாய் பிரஜைகள் குழுவினர் தமது பகுதி உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். மேலும் அம்மகஜரில் அகதிகள் விடயத்தில் கருணைகாட்டி தரமான அரிசி விநியோகம் செய்யவும், விரும்பும் பொருட்களை அவர்கள் பெற்றுக் கொள்ளவும் ஏற்ற நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**உதய சிந்தனை**

பொறுமைச் சொற்களைப் பேசுதல் ஒருவனின் சொந்த வளர்ச்சிக்கும் செல்வத்திற்கும் அழிவைத் தந்து விடும்-

--கொன்றை வேந்தன்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

# இதய ஒலி

7-11-85 வியாழக்கிழமை (குரோதன - ஐப்பசி 22)

## ஈழத்தமிழரின் விலை 584 கோடி ரூபா!

"வல்லரசு நாடுகள் ஆயுத உற்பத்திக்குச் செலவிடும் பணத்தில் சிறுபகுதியையாவது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வழங்கினுல். அங்கு ஏழ்மையைப் போக்கடிக்க முடியும்."

எங்கள் நாட்டின் சிரேஷ்ட அரசியல் தலைவர் ஒருவர் சர்வதேச மாநாடொன்றில் மிக அண்மையில் பேசும் போது தெரிவித்த கருத்து இது.

"இலங்கையின் அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மிகக் கூடுதலான தொகைப்பணம் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது; இதற்கென 584 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது."

எங்கள் நாட்டின் நிதி அமைச்சர் ரொனி டிமெல் அவர்கள், நேற்றுமுன்தினம் ஜெயவர்த்தனபுர பாராளுமன்றத்தில் விடுத்த அறிவிப்பு இது.

"இலங்கையின்இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவே விரும்புகின்றோம். இராணுவத்தீர்வு காணும் நோக்கம் இடையவே கிடையாது."

அதிஉத்தம ஜனதிபதியிலிருந்து அமைச்சர்கள் வரையிலான ஆட்சிபீடப் பிரமுகர்கள் அனைவரும் தெரிவித்து வரும் ஏகோபித்த குரல் இது.

"பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டுமாஞல் இராணுவத்தின் தொகை அதிகரிக்கப்பட வேண்டும். நவீன ஆயுதங்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டும், அவசியம் ஏற்படின் மேலதிக நிதியையும் இதற்கு வழங்க நான் தயாராகவுள்ளேன்."

சில தினங்களுக்கு முன்னர் 'கல்லாப்பெட்டி' க்குப் பொறுப்பானவர் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரை இது.

"பதினெரு கொள்கலங்களில் ஆயுதங்கள் கப்பலில் கொண்டு வரப்பட்டு கடலில் காத்திருக்கின்றன" என்பது எதிர்க்கட்சி உறுப்பினரான திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் பகிரங்கப்படுத்திய அரசாங்க ரகசியமாகும்.

ஹெலிகப்டர்களும் மினியுத்தக் கப்பல்களும், அதிநவீன குண்டுகளும், லோஞ்சர்களும் இங்கு வந்து குவிந்து கொண்டிருப்பதாக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவைகளைப்படிக்கும் போதும், கேட்கும் போதும் எம்மால் உணரக்கூடியதாக இருப்பது என்ன?

உலக வல்லரசுகள் தமது ஆயுத உற்பத்திச் செலவில் ஒரு பகுதியைக் குறைக்க வேண்டுமெனக் கேட்கும் இலங்கை அரசு தனது அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 584 கோடி ரூபாவை ஆயுதப்படைகளுக்காக ஒதுக்க வேண்டியது அவசியம் தானு?

உள்நாட்டுப் பாதுகாப்புக்காகவே இப்பணம் ஒதுக்கப்படுவதாக அரசாங்கம் கூறுகிறது. அவ்வாறு கூறுவதன் அர்த்தமென்ன?

இங்கு ஒரு உள்நாட்டு யுத்தம் நடைபெறுவதாக கூறிக்கொள்ளும் அரசாங்க தரப்பினர், அந்த யுத்தத்திற்காகத்தான் 584 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார்கள் என்று கருதினுல் விடுதலை வேண்டிநிற்கும் தமிழினத்தை ஒழித்துக் கட்டவே இப்பணம் பயன்படுத்தப்படப்போகிறது என்பதே எமது கருத்தாகும்.

அரசியல் தீர்வையே அரசாங்கம் வேண்டிநிற்பதாக, வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்காக பேசித்திரிபவர்கள், அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளிடமிருந்து பணத்தையும், பயங்கர ஆயுதங்களையும் பெறுவதற்காக புதிய பிரச்சார உத்திகளையும் கையாளத்தொடங்கியுள்ளனர்.

தமிழீழப் போராளிகளை பயங்கர வாதிகள் என்று அழைத்த காலம் போய், இப்போது மாக்ஸிஸ பயங்கரவாதிகள் என்று பட்டம்சூட்டிப் பிரச்சாரம் செய்வதெல்லாம் பெரும் சூழ்ச்சியொன்றுக்கான அடித்தளமாகும்,

அரசாங்க வெகுஜன தொடர்புச் சாதனங்கள் தானே இப்படித் தெரிவிக்கின்றன என்று வாளாவிருந்தால், அதனுல் ஏற்படக்கூடிய ஆபத்தைப் பின்னரே உணர முடியும்.

அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்நாட்டுப் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்டுள்ள 584 கோடி ரூபாவும், ஈழம் வாழ் தமிழர்களின் உயிருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையாகவும் இருக்கலாம்.

---

"பாரம்பரிய தாயகங்கள்; உண்மையும் சில கற்பனைகளும்" என்ற தலைப்பில் டெய்லி நியூஸில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்.

# தமிழ்ப் பகுதிகளுக்கு ராணுவம் அனுப்பப்படின் தமிழருக்கு நன்மை கிட்டாது

'தாயகங்கள்' தொடர்பாக இரு சாராரும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளத்தக்க ஓரளவு விட்டுக்கொடுக்கும் பாங்கான, நிலைப்பாடு யாது? இரு விடயங்கள் இச்சர்ச்சையில் கணிப்பு வழங்கி ஒத்துக் கொள்ளப் பெறுதல் வேண்டும். வடக்கு. கிழக்கு மாகாணங்களில், தமிழர்கள் எண்ணிக்கையில் மேலோங்கிய நிலைமை அவர்களுக்குத் தற்போதைய அரசியல் தேவையாகும். அதேவேளை, நாட்டின் ஏனைய பாகங்களில் "நிலப்பசி" நிலவுகின்றமையும் ஏற்றுக் கொள்ளப்படுதல், வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போதைய சனத்தொகை இனவாரியாக குறித்த ஒரு விகிதாசாரத்தில் உள்ளது. பரவலாக அடுத்த இருபத்தைந்து வருடங்கள் அங்கு ஒரு குடியமர்த்தல் கொள்கையை இதே இனவாரி விகிதாசார அடிப்படையில் நடைமுறைப்படுத்தலாம். உடன்பட்டுக் கொள்ளப்பட்ட இக்கால் நூற்றுண்டு கடந்து போன பின்னர், காணிக் குடியமர்த்தற் கொள்கையை மீண்டும் ஒழுங்கமைத்துக் கொள்ளலாம். இப் பணி வகித்தற்கென அரசாங்கம் ஒரு மாகாண ஆணைக் குழுவை அமைக்கும். அரச அமைப்பின் பேரில், இதே போன்ற ஒரு மத்திய ஆணைக் குழுவும் இருக்கும். இவ்விரு குழுக்களும் சேர்ந்து இம்மீள் ஒழுங்கமைப்பை மேற்கொள்ளலாம்.

இங்கு ஆராயப்பட்ட தமிழர்களின் மூன்று கோரிக்கைகளும் ஒரு வகையில் முக்கியமாக மேடைச் சொற்பொழிவுத் தாக்கத்திற்காகவும் பிரசாரத்திற்காகவும் எடுத்துக் கொள்ளப்பட்டன எனலாம். இக் கோரிக்கைகளை இலங்கை அரசு காகிதத்தில் வழங்கலாம். ஆனுல், உண்மையான ஆட்சி அதிகாரப் பகிர்விலும் பார்க்க, அத்துடன் அதிக இராணுவத்தினர் இப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படுவார்களாயின் நிலைமை என்னவாகும்? உருப்படியான நன்மை எதுவும் தமிழ் மக்களுக்குக் கிட்டாது.

பாலஸ்தீனியர்களின் நாடற்ற நிலைமை இதற்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும். அவர்களுக்குச் சுயநிருணய உரிமை உண்டு; ஒரு நாடு உடையோராக இருக்கும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. இவ்வாறுன உத்தியோகபூர்வ கணிப்பு பெரும்பாலான நாடுகளிடமிருந்து அவர்களுக்குக் கிடைத்துள்ளது கிடைத்துங் கூட, பாலஸ்தீனியரின் நாடற்ற நிலை இன்னமும் தொடர்கிறது.

சிங்களத் தேசிய முன்னணி, யும் அதன் தலைமைப் பீடமும் எதனைத்தான் கூறிவந்தாலும், தமிழரின் கெரில்லாப்போருக்கு ஓர் இராணுவத் தீர்வுகாண இலங்கை அரசாங்கத்தினுல் முடியாது. தற்போது இலங்கை இராணுவத்தினது தளபதியாகவுள்ள நளின் செனெவிரத்தினவே இப்படி ஒத்துக் கொண்டுள்ளார். மாருக அதன் அரசியல் தீர்வானது. குறைந்த பட்சம் தேசிய ஐக்கியத்தைப் பேணும் அளவிற்காவது கெரில்லா நடவடிக்கைகளையும் பயங்கரவாதத்தையும் கையடக்கமாக வைத்துள்ளது. சமஷ்டி ஆட்சிமுறை எந்நாட்டிலாவது பிரிவினைக்கு இட்டுச் சென்றது கிடையாது, பொதுசன அபிப்பிராயம் இதனைத் தக்கபடி புரிந்து கொள்ளாது, எவ்வளவுதான் இதற்கு முரணுன நிலைப்பாடு மேற்கொண்டிருந்தாலும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளானவை, படிப்படியாக அரச பயங்கரவாதம் எனும் இழிநிலைக்கு இறங்கி, காலகதியில் பிரிவினைக்கு வழிவகுத்துள்ளன.

பல்வேறு வழிகளில் மத்திய அரசானது ஆட்சியதிகார வலுவைப் பிராந்தியச் சிறுபான்மையினருக்கு விநியோகிக்க இடமுண்டு. இவற்றுள் மிகப் பொதுவான வடிவம் சமஷ்டி ஆட்சி முறையாகும். இந்த அரசியல் ஒழுங்கமைப்பின்கீழ், தேசிய ஐக்கியம் ஒரு புறமும், அதே சமயம் பிராந்திய சிறுபான்மையினரின் உரிமைகள் மறுபுறமும் ஒன்றுக்கொன்று நல்லிணக்கமாகப்பேணப்படும். இவ்வமைப்பின் முக்கிய கவனமானது இந்தப் பேணல், நல்லிணக்கம் ஆகியவற்றின்பால் பதிந்துள்ளது.

**நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி: இதனை எழுதியவர் ஜெகன் பெரேரா.**

ஒரு சமஷ்டி ஆட்சி முறையின் கீழ், மத்திய அரசு சில அதிகாரங்களைத் தன் வசமே வைத்துக் கொள்ளும். அதன் பிற சில அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும், இவற்றையிட்டு முன் கூட்டியே உடன்பாடு காணப்பெற்றிருக்கும். அவற்றுக்குச் சில எடுத்துக்காட்டுகள் கல்வி, காணிக் குடியமர்வு, பொலிஸ் அதிகாரங்கள் முதலாயினவாம். இப்படியாக, சில அதிகாரங்களானவை மத்திய அரசு, பிராந்திய அரசுகள் ஆகிய இரு சாராருக்கும் இடையில் பகிர்ந்து கொள்ளப் பெறும். சில, பிராந்திய அரசுகளிடம் முழுமையாகவே விடப்பட்டுவிடும். இது பிரிவினையோ, அதனை நோக்கிச் செல்லுதற்கான முதற்படியோ ஆகாது.

### ஒன்றிணைவு

இலங்கையில் பிராந்தியங்கள் தோறும் மனித இனக் குழுமங்கள் கலந்து வாழ்கின்றன. இனங்கள் கலந்து வசிக்கும் சமஷ்டி அரசுகள் அல்லது சமஷ்டி மாகாணங்களை உருவாக்குவதன் மூலம் தேசிய மட்டத்தில் இனப் பிணக்குகள் தணிய இடமுண்டாகும். இத்தகைய பிற இடங்களில் இது நல்ல பயனை அளித்துள்ளது. அதே போல, இலங்கையிலும் இந்த சமஷ்டி ஆட்சி முறையைப் பயன்படுத்தலாம்.

முதலாவதாக இனங்களுக்கு இடையிலான விகிதாசாரம் இடத்திற்கு இடம் வேறுபடக் கூடும். உதாரணமாக, மத்திய அரசு நிலைபெற்றுள்ள இடத்தில் உள்ள சனத்தொகையில் சிறுபான்மையினராக வாழும் ஓர் இனம், மாநில அரசுகளில் அல்லது மாகாணங்களில் பெரும்பான்மையினராக இருக்கக் கூடும். கொழும்பில் சிறுபான்மையினராக வசிக்கும் தமிழ் இனத்தவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். மத்திய அரசில் அவர்களுடைய செல்வாக்கு சொற்பமே. சில சந்தர்ப்பங்களில் அவர்கள் மத்திய அரசின் நடவடிக்கைகளிற் பங்குபற்றுதபடி விலக்கப்பட்டுக் கூட இருக்கலாம். இதனுல் அவர்கள் மனதில் ஆத்திரம் மூளுகிறது. அவ்வினம் பெரும்பான்மையினராக வாழும் மாநிலங்களில் அல்லது மாகாணங்களில் அவர்கள் கொள்கைகளை நிருணயிக்கும் அளவிற்குச் செல்வாக்குப் படைத்தவர்களாக இருப்பர். இச் செல்வாக்கு, சற்று முன் குறிப்பிடப்பெற்ற இவர்களது ஆத்திரம் எதுவும் எழுமாயின், அது தணிந்து போக ஏதுவாகும்.

(முற்றும்)

## பரிசு பெற்ற மாணவர்கள்

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு அரசாங்க அதிபரினுல் க. பொ. த. (உயர் தரம்) வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கிடையேநடாத்தப்பட்ட தேசிய உரவாரக் கட்டுரைப் போட்டியில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் வே. சிவச்சந்திரன் முதலாம் இடத்தையும் மேற்படி கல்லூரியைச் சேர்ந்த செல்வி. க. விஜயகுமாரி இரண்டாம் இடத்தையும் மல்லாவி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பா. ஜோன் பப்ரின் மூன்றும் இடத்தையும் பெற்று முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் தமது பரிசில்களைப் பெற்றனர்.

## உசன் விழிப்புக்குழு

(கொடிகாமம்)

உசன் விழிப்புக் குழுத் தெரிவு அண்மையில் உசன்கிராம அபிவிருத்திச்சபை மண்டபத்தில் நடைபெற்ற போது தலைவராக சி. கனகசபையும உப தலைவர்சளாக வி, சிவபாதம், க. சுந்தரலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

குழுத் தலைவர்களாக ச. செல்லத்துரை, க. சரவணமுத்து, தி. வெற்றிவேலு, மு. சிவகுரு, ந. இராசகுலசிங்கம், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

★ ஜெனீவா சந்திப்பின்போது தனது அவா குறித்து கொர்பசெவ் விளக்கம்

# விண்ணிலும், மண்ணிலும் அணுவாயுத பாவனை குறைய முயற்சி வேண்டும்

(மாஸ்கோ)

ஜெனீவாவில் இம்மாதம் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டின் போது விண்வெளியிலும். புவியிலும் அணுவாயுத பாவனையை நிறுத்துவது என்ற விடயத்துக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று சோவியத் தலைவர் திரு. கொர்பசெவ் தன்னைச் சந்தித்த அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. சூல்ட்ஸிடம் கேட்டுக்கொண்டுள்ளதாகக் 'கிரெம்ளின்' அறிக்கைகள் நேற்றுத் தெரிவித்தன.

முன்னதாக திரு. சூல்ட்ஸ் சோவியத் வெளிநாட்டமைச்சருடன் எட்டுமணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போராயுதங்களைக் குறைத்துப் பதற்றத்தைத் தணிப்பதில் பரஸ்பர ஆர்வம் காட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்புகளையடுத்து திரு. சூல்ட்ஸ் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில், 'இப் பேச்சு வார்த்தைகள் இருவல்லரசுகளுக்கும் இடையே பரஸ்பரம் பரிவுணர்வைத் தோற்றுவிக்க உதவியது' என்றும் சொன்னார்.

இது இவ்வாறு இருக்க, விண்வெளிப் போராயுதத் தொழில் நுட்பங்களை சோவியத் யூனியன் உட்பட வேறுநாடுகளுடனும் பகிர்ந்து கொள்ள அமெரிக்கா தயாராக இருப்பதாக ஜனாதிபதி திரு. றீகன் அறிவித்துள்ளதாக வாஷிங்டன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வன்செயலை ஒழிக்க நடவடிக்கை

(லண்டன்)

பிரிட்டிஷ் அரசு சட்ட விரோத வன்செயல் நடவடிக்கைகள் தொடர்பாகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

லண்டனில் சமீபகாலத்தில் கலவரங்கள் அதிகரித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழம் தேசிய விடுதலை முன்னணியினரின்

## எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் பண்டாரியிடம் விளக்குவர்

(சென்னை)

'திம்பு'ப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான எதிர்பார்ப்புகளையும், ஏமாற்றத்தையும் ஈழம் தேசிய விடுதலை முன்னணியினர் வெளியுறவு அமைச்சர் திரு. ரமேஷ் பண்டாரியைப் புதுடில்லியில் சந்திக்கும் போது விபரிக்கும் மகஜர் ஒன்றையும் கையளிப்பர் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினரின் போர் நிறுத்த மீறல் குறித்தும் திரு. பண்டாரியிடம் தாம் விளக்கப்போவதாகவும் முன்னணியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், ஈழம் தேசிய விடுதலை முன்னணியினரும் இருதினங்கள் தங்கியிருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலில்

## பாலஸ்தீனியரை விடுதலை செய்யக்கோரி கிளர்ச்சி

(டெல்அவிவ்)

இஸ்ரேலின் மேற்குக் கரையோரப் பகுதியிலும், காஸா பகுதியிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் என அறிவிக்கப்பட்டது.

சிறைச்சாலைகளிலும், முகாம்களிலும் உள்ள பாலஸ்தீனக் கைதிகளை விடுதலை செய்யக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யாவின்

## 19 உறுப்பினர் வர்த்தக தூதுக்குழு டில்லி விஜயம்

(புதுடில்லி)

பத்தொன்பது உறுப்பினர்கள் கொண்ட சோவியத் வர்த்தகத் தூதுக்குழு ஒன்று புதுடில்லியில் தொழில்துறை மந்திரி திரு. திவாரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

வர்த்தகத்துறைப் பரிவர்த்தனை குறித்தும் விவசாய விஸ்தரிப்புக் குறித்தும் அப்போது ஆராயப்பட்டதாகவும் புதுடில்லி வட்டாரங்கள் தகவல் தந்தன.

கம்பூச்சியாவிலிருந்து

## வியட்னாமியப் படைகள் விலகிக் கொள்ள வேண்டும்

(நியூயோர்க்)

கம்பூச்சியாவிலிருந்து வியட்னாமியப் படைகள் விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையும் இதனை ஆமோதிக்கக் கோரும் பிரேரணையை அங்கீகரித்துள்ளது.

பாரத வெளியுறவு மந்திரி கூறுகிறார்

## அணுவாயுத உற்பத்திக்கான இரகசிய முயற்சியில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது

(புதுடில்லி)

"பாகிஸ்தான் அணுவாயுதத் தயாரிப்புக்கான இரகசிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.' என்று வெளிநாட்டமைச்சர் திரு.பி.ஆர். பகத் புதுடில்லியில் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் சொன்னார்.

"அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் தேவைக்குக் கூடிய அளவில் அதிநவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகிறது" என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## சீனாவுடனான அணுவாயுத ஒப்பந்தம் ரத்தாகுமா?

(வாஷிங்டன்)

சீனாவுடனான அணுவாயுத ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டாமென அமெரிக்கப் பாராளுமன்றக் குழு ஒன்று ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனிடம் கேட்டுக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தின் மிதவாத, பழைமைவாத போக்குடைய நாற்பத்தாறு எம். பிக்கள் இக்கோரிக்கை சம்பந்தமான கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

பாகிஸ்தானுக்கும், ஈரானுக்கும் சீனா அணுவாயுத உதவியளிக்கும் நிலையையும் அவர்கள் இதில் மேற்கோள் காட்டியுள்ளனர்.

இக்கடிதம் தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன என்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

ஜனாதிபதி சீனாவுடன் செய்து கொண்டுள்ள மேற்படி ஒப்பந்தம் எதிர்ப்பின்றேல் டிசம்பர் மாதம் எட்டாம் திகதி தானாகவே அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## காலனி ஆதிக்கத்தின் இறுதி அடிச்சுவடு தென்னாபிரிக்கா - ராஜீவ் காந்தி சொல்கிறார்

(புதுடில்லி)

"காலனி ஆதிக்கத்தின் கடைசி அடிச்சுவடாகத் தென்னாபிரிக்கா இருக்கும்" என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி அணிசேரா நாடுகளின் பண்பாட்டுக் கழக இளைஞர் விழாவில் நேற்றுப் பேசுகையில் கூறினார்.

"ஒவ்வொரு நாட்டுக்கும் சுதந்திரம் தேவை. தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக இளைஞர்கள் ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப வேண்டும். கொந்தளிப்புமிக்க இன்றைய சமுதாயத்தில் சகலரும் அமைதியையே நாடுகின்றனர்" என்றும் பிரதமர் சொன்னார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இளைஞர்களுக்குப் புதிய கருத்துகள், கண்டேனாட்டங்கள்தேவை. புதிய சிந்தனைகள் வேண்டும். ஒருவரையொருவர் புரிந்து கொள்ள வேண்டும், உலக சமாதானம், வளர்ச்சிக்காக இளைஞர்கள் உழைக்க வேண்டும்.

## சூல்ட்ஸ் கருத்து

(மாஸ்கோ)

சோவியத் தலைவர்களுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் இரு வல்லரசுகளுக்கும் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை ஓரளவு குறைக்க உதவின என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ் சூல்ட்ஸ் கருத்து வெளியிட்டுளளார்.

பிரதமர் ராஜீவ் குற்றச்சாட்டு

## ஆப்கான். விவகாரத்தை நீடித்திருக்க செய்வதே பாகிஸ்தானின் எண்ணம்

(புதுடில்லி)

"பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் விவகாரத்தை நீடித்து வைத்திருக்கவே ஆர்வம் கொண்டுள்ளது" என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

"காஷ்மீர் பிரச்சினையை மீண்டும் தோற்றுவிக்கப் பாகிஸ்தான் முனைகிறது என்பதும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியாவுல்-ஹக் ஐக்கிய நாடுகள் சபையில் நிகழ்த்திய உரையிலிருந்து தெளிவாகிறது" என்றும் அவர் சொன்னார்.

சீனாவுடனான உறவுநிலை குறித்துப் பிரஸ்தாபித்த பிரதம மந்திரி "தற்போது இருதரப்பினருக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள பதற்றத்தைக் குறைப்பதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளன" என்றார்.

அமெரிக்க, சோவியத் தலைவர்களுக்கிடையேயான ஜெனீவா உச்சிமாநாடு பற்றிக் கருத்து வெளியிடுகையில், "இரு வல்லரசுகளினதும் யோசனைகளும்வரவேற்கத்தக்கன. அணுவாயுதக் குறைப்புக்கு இந்த யோசனைகள் வழிவகுக்கும் என்ற நம்பிக்கை கொள்ள முடிகிறது" என்று சொன்னார் பிரதம மந்திரி.

## பாக். ஆயுத உற்பத்தி அதிகரிக்கும்

(கராச்சி)

"பாகிஸ்தான் ஆயுத உற்பத்திகளை அதிகரிக்கவுள்ளது." என்று பாகிஸ்தான் பிரதமமந்திரி திரு. ஜுனெஜோ அறிவித்துள்ளார்.

சீன உதவியுடனான பீரங்கித் தொழிற்சாலை ஒன்றில் நிகழ்ந்த வைபவத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வறிவிப்பை விடுத்தார்.

ஆயுத உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதே இதன் நோக்கம் என்று அவர் சொன்னார்.

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல் ஜனவரி 17ம் திகதி நடைபெறுமென அறிவிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல் ஜனவரி மாதம் பதினேழாம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தலை ஜனாதிபதி திரு. பேடினன் மார்க்கோஸ் கொலையுண்ட எதிர்க்கட்சித் தலைவர் அக்கினோவின் தொகுதியில் இருந்து வெளியிட்டதாக ராய்ட்டர் செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

துணை ஜனாதிபதி வேட்பாளர் இன்றி தான் தனித்துப் போட்டியிடப் போவதாக அவர் அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1987-ம் வருடத்திற்குமுன் ஜனதிபதி தேர்தல் நடைபெறாது என்று இருவாரங்களுக்குமுன் ஜனாதிபதி விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து இப்போது இப்புதிய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## வேலைநிறுத்தம் முடிந்தது

(கோயம்புத்தூர்)

கோயம்புத்தூரில் நிகழ்ந்த ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

7 11 . 85 வியாழக்கிழமை

ஈழமுரசு

## எழுபத்தைந்து திருமலை அகதிகள் வள்ளத்தில் வல்வை வந்தனர்

வல்வெட்டித்துறைக்கு சுமார் இருபது குடும்பங்களைச் சேர்ந்த எழுபத்தைந்து பேர் கடந்த ஞாயிறு இரவு வள்ளங்கள் மூலம் அகதிகளாக வந்து சேர்ந்துள்ளார்கள். திருமலையில் இடம்பெற்ற கலவரங்களால் பாதிக்கப்பட்ட இவர்கள் முல்லைத்தீவில் தங்கியிருந்துவிட்டு வல்வெட்டித்துறைக்கு இப்பொழுது வந்துள்ளார்கள். திருமலைக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான தமிழ் அகதிகள் ஏற்கனவே வள்ளங்கள் மூலம் வல்வெட்டித்துறை வந்துள்ளார்கள். மேலும் பலர் முல்லைத்தீவில் தங்கியுள்ளார்கள்.

குண்டுவெடிப்புகளும் தாராளமாக இடம்பெற்றது:

# இராணுவத்தினர் பரந்தனில் நேற்று நடத்திய துப்பாக்கிச் சூடு; மக்கள் கிலிகொண்டு ஓட்டம்

(பரந்தன்)

ஜீப் வண்டிகள் இரண்டிலும், ட்ரக் வண்டி ஒன்றிலும் வந்த இராணுவத்தினர் பரந்தன் சந்தியில் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதால் மக்கள் கிலிகொண்டு சிதறி ஓடினர், வியாபாரிகளும் வியாபார நிலையங்களில் வேலை செய்தவர்களும் பொருட்களை அப்படியே விட்டுவிட்டும் கடைகளைத் திறந்தபடி விட்டும் சிதறி ஓடினர்.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் கிளிநொச்சியிலிருந்து பூநகரி இராணுவ முகாமுக்குச் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரே இவ்வாறு துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இராணுவத்தினர் பரந்தன் பூநகரி வீதிச் சந்தியில் சென்றுகொண்டிருந்தபோது வேறொருபக்கத்திலிருந்து கைக்குண்டு வெடித்ததாகவும் அதனைத்தொடர்ந்து இராணுவத்தினர் வானத்தைநோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் அறியப்படுகிறது.

இச்சம்பவத்தின்போது இராணுவத்தினருக்கோ பொதுமக்களுக்கோ எதுவித சேதமும் ஏற்படவில்லை. சுமார் ஒருமணித்தியாலத்தின் பின்னர் விமானமொன்று பரந்தன் சந்தியில் வட்டமடித்துச் சென்றது. நண்பகல் வரை சந்தியில் சனநடமாட்டம் காணப்படவில்லை. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

## இலங்கையர் அமெரிக்காஊடாக பயணம் செய்ய இன்றுமுதல் விஸாகட்டாயம் தேவை

இன்றுமுதல் வேறுநாடுகளுக்கு விமானமூலம் அமெரிக்க ஊடாகச் செல்பவர்கள் அமெரிக்காவில் தரித்துச் செல்வதற்கு இடைவழித்தரிப்பு (ரூன்ஸ்சிற்) விசாபெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது

இக்கட்டுப்பாடு இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்களாதேசம் ஆகியநாட்டுப் பிரஜைகளுக்கே விதிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்திருக்கிறது. அமெரிக்காவுள் செல்வதற்கு அனுமதிபெறுதவர்கள் சட்டவிரோதமாக உட்பிரவேசிப்பதைத் தடைசெய்யும் முகமாகவே அமெரிக்கா இப்புதிய கட்டுப்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

வெளிநாடுசெல்லும் இலங்கையர் அமெரிக்க விமானநிலையங்களில் தரித்துச் செல்ல வேண்டுமாயின் இடைவழித்தரிப்பு விசாவைப் பெற்றுச் செல்லவேண்டும்.

கொழும்பு - காலிவீதியிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தில் தகுந்த அத்தாட்சிகளைச் சமர்ப்பித்து இவ் விசாவைப் பெற்றுக் கொள்ளமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று ஏகதின லட்சார்ச்சனை

(சுழிபுரம்)

சுழிபுரம் பத்ரகாளி அம்பாள் ஆலய வருடாந்த ஏகதின லட்சார்ச்சனை இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இவ்வைபவம் மாலை நிறைவுற்றதும் தொடர்ந்து திரிகதிஹோமம், மாலாமந்திரஹோமம், தாராஹோமம், மகாபூர்ணுகுதி ஆகியன நடைபெற்று பூந்தண்டிகையில் அம்பாள் வீதியுலாவும் நடைபெறும்.

### புதுடில்லி ...

லர் திரு. ரமேஷ் பண்டாரியுடன், தமிழீழக் குழுக்கள் இன்றும், நாளையும் பேச்சுவார்த்தை நடத்துவர்.

இதன் பின்னர் கூட்டணித் தலைவர்கள் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப்பேசலாமெனவும் தெரியவந்துள்ளது.

### 30 மாணவர்...

—1ஆம் பக்கத் தொடர்

பது ஸ்ரீ லங்கா அரசின் சுயரூபத்தினை வெளிக் கொணர்ந்துள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இச் சம்பவத்திற்கு எதிராக மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களால் மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பூரண ஆதரவினைத் தெரிவிக்கும் அதேவேளை மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் இவ்வடக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டுமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நாளை காலை கூடி ஆராயவிருக்கின்றூர்கள்

### ராணுவ....

தாம் முதலில் திரும்பிச்செல்ல வேண்டி ஏற்பட்டதாக அவர்கள் முதலில் அங்கு தெரிவித்தார்கள்.

தாம் இங்கு முறைப்பாடு செய்யவரவில்லை எனவும் கண்காணிப்புக்குழுவின் விசாரணைகளை இலகுவாக்குவதற்காகவே வந்திருப்பதாகவும் பிரஜைகள் குழுவினர் தெரிவித்தார்கள்.

இராணுவ நடமாட்டம் பற்றியும், கடல் பாதுகாப்பால் ஏற்படுகின்ற பாதிப்புகள் பற்றியும் பிரஜைகள் குழுவினர் விளக்கிக் கூறினுர்கள்.

### இன்று...

களை நேற்றுடன் முடித்துக் கொண்டு, நேற்றிரவு பலாலி திரும்பினர். இன்று காலை ராணுவ அதிகாரிகள் விசாரணை செய்யப்படுவர். முன்னர் அறிவிக்கப்பட்டது போல செட்டிக்குளம் செல்லாது இன்று மாலை கொழும்பு திரும்புவர்.

### சட்டவிரோத...

கியதால் மற்றவர்கள் மின் கம்பியை நோக்கி தடிகளால் எறிந்து அலுமினியக் குழாயை கீழே வீழ்த்தியபோதும் அவர் கடும் தாக்குதலுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### பஸ் நிலைய

கோப்' மூலம் சோதனை செய்ய முயன்றபோது, பஸ் நிலையத்தில் உரத்த தொனியில் ஒலிபரப்பப்படும் பாடல்களை தமது காதுக்குள் கேட்பதாக அனுபவப்பட்ட டாக்டர் ஒருவர் தெரிவித்தார்.

சமூக நன்மை விரும்பிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து உரிய ஒழுங்குகள் செய்யாதவரை நோயாளிகளே பாதிக்கப்படுவரெனவும் அவர்சொன்னுர்.

## மரண அறிவித்தல்

### சபாபதி சங்கரப்பிள்ளை

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த சபாபதி சங்கரப்பிள்ளை காலமானுர். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும்; நவரட்ணம், செல்வராஜா, சற்குணராஜா, விக்னேஸ்வரி, தவமலர், சண்முகலிங்கம் ஆகியோரின் தந்தையும், மனோகரனின் மாமனுரும், துஷிமன்ராஜ், துஷிதா, நிதர்சன், சுதர்சன், மயிற்ரா ஆகியோரின் பேரனும், திருமதி தம்பு பூரணத்தின் சகோதரரும், கணபதி கதிரவேலு அவர்களின் மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக் கிரியைகளுக்காக இன்று 7—11—1985 பிற்பகல் 2·00 மணிக்கு கோண்டாவில் வடக்கு சங்கர் இல்லத்திலிருந்து காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றூர், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மாணிக்கம் குணசிங்கம்

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 07-11-1985 வியாழக்கிழமை தொலைபேசி: 23336

## தபால் நிலைய ஓய்வூதியம் 14-ம்திகதி முதல் கிடைக்கும்

தபாற் கந்தோர் ஊடாக வழங்கப்படும் நவம்பர் மாத ஓய்வூதியம் துரையப்பா ஸ்ரேடியத்தில் பின்வரும்திகதிகளில் கீழ் குறிப்பிட்ட இடங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

14 ஆம் திகதி வியாழன்: காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, வல்வெட்டித்துறை, கரவெட்டி.

15 ஆம் திகதி வெள்ளி: யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, உரும்பராய்.

18 ஆம் திகதி திங்கள்: சுன்னுகம், வேலணை, சாவகச்சேரி

19 ஆம் திகதி செவ்வாய்: பருத்தித்துறை, வசாவிளான், அச்சுவேலி, வண்ணுர்பண்ணை.

20 ஆம் திகதி புதன்: சங்கானை, கொடிகாமம், நெடுந்தீவு, நயினுதீவு, அனலைதீவு அளவெட்டி, கைதடி, சுழிபுரம்.

21 ஆம் திகதி: வியாழன்: மானிப்பாய், கொக்குவில், காரைநகர், வட்டுக்கோட்டை.

22 ஆம் திகதி வெள்ளி: கோப்பாய், யாழ்ப்பாணம், புங்குடுதீவு, பண்டத்தரிப்பு.

### யுத்த நிறுத்த...

தெரிவித்தார்கள்.

பருத்தித்துறை இராணுவ முகாம் இருப்பதனுல் இரண்டு அரசாங்க அலுவலகங்களும் மெதடிஸ்த தேவாலயம் ஒன்றும், நான்கு இந்துக் கோவில்களும் இயங்கமுடியாமல் உள்ளன, முகாமிற்கு அருகேயுள்ள வீடுகள் உடைக்கப்படுவதால் அவர்கள் அகதிகளாக வெளியேறவேண்டியுள்ளது எனவும் கண்காணிப்புக் குழுவினருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

கடந்த பதினுரம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் நால்வர் காயமடைந்தது பற்றியும் இங்குவிபரிக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின்சார்பில், பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம். டாக்டர் எஸ், கணேசானந்தம், திரு. ஆ, தேவராஜா, திரு. எஸ். சுப்பிரமணியம், திரு. எம். பி. வீரவாகு ஆகியோர் சாட்சியமளித்தார்கள்.

### இரு கண்ணி....

படுகாயமுற்ற மிகுதி மூவரும் கொழும்பு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

### பத்மநாபா...

வார். ஈ பி. ஆர். எல். எப். நடத்தும் இவ் ஒலிபரப்பை பிற்பகல் மூன்று மணிக்கும் இரவு எட்டு மணிக்கும் 41 மீற்றர் சிற்றலை வரிசையில் கேட்கலாம்.

### கண்காணிப்புக்குழு...

—1-ஆம் பக்கத் தொடர்

10-30 மணி முதல் ஈழ விடுதலைப் போராளிகளின் இவ் அறிவித்தலை, சிங்களம், தமிழ் மொழிகளில் இரண்டு மணித்தியாலம் மாறி மாறி ஒலிபரப்பப்பட்டது.

ஹோட்டலில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் தமது விசாரணைகளை இடைநடுவில் நிறுத்திக் கொண்டு வெளியே வந்து இவ் அறிவித்தலை அவதானித்தார்கள்.

இவ் அறிவித்தலின் முழு விபரமும் வருமாறு:

கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கும் லங்காஸ்ரீ இராணுவத்திற்கும் ஈழ விடுதலைப் போராளிகளின் அறிவித்தல்;

ஸ்ரீ லங்கா அரசின் 'கண்காணிப்புக் குழு' நேர்மையாக இயங்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. இருந்தபோதும் அதன் குறைந்த பட்ச செயற்பாட்டை நாம் அனுமதிக்கிறேம். இதனடிப்படையில் எமது ஈழ தேசத்தின் யாழ்ப்பாண நகரில் சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளைக் கொண்ட 'கண்காணிப்புக் குழு' கூடுவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கு உயிராபத்தோ, ஆட்கடத்தல் நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படமாட்டாது என உறுதியளிக்கின்றேம்.

இதை மீறி ஸ்ரீ லங்கா இராணுவத்தின் பாதுகாப்பில் கூட்டத்தை நடத்த முற்படும் பட்சத்தில் பின்வரும் நிபந்தனைகளை ஸ்ரீ லங்கா இராணுவத்திற்கு விதிக்கிறேம்:

✱ கோட்டையிலிருந்து கூட்டம் நடைபெறும் இடம்வரை ஒரே பாதையைப் பாவிக்க வேண்டும்.

✱ இப்பாதையிலோ, சுற்றுடலிலோ எமது மக்களுக்கு சிறிதளவு தீங்கேனும் ஏற்படுத்தக்கூடாது.

✱ கண்காணிப்புக் குழுக் கூட்டத்தை குளப்பும் எச்சதி முயற்சியிலும் ஈடுபடக்கூடாது,

இவற்றை மீறுவது யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறுவதேயாகும். இந்நிபந்தனைகள் மீறப்பட்டால் நாம் பதில் நடவடிக்கை எடுப்போமென எச்சரிக்கிறேம்.

ஸ்ரீ லங்கா தரகு முதலாளித்துவ அரசு தனது நலன்களைப் பாதுகாக்க வறிய சிங்கள மக்களின் குழந்தைகளை அநியாயமாகப் பலியிடுகிறது. ஒவ்வொரு ஸ்ரீ லங்கா இராணுவ வீரனும் இவ் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது மக்களின் விடுதலைக்காக நாம் நியாயமான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். நாம் சிங்கள மக்களின் எதிரிகளல்ல. ஸ்ரீ லங்கா அரசு கூறுவதைப்போல் பயங்கரவாதிகளும் அல்ல. நாம் விடுதலைப் போராளிகள்.

ஓங்குக மக்களின் ஐக்கியம்; வெல்க ஈழதேச விடுதலைப் போராட்டம். இங்ஙனம், ஈழ விடுதலைப் போராளிகள்.